திருக்கோயிலுக்கு அருகே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அங்கே போதுமான இடம் இருந்தால், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியோ, அங்கு வேறு ஏதாவது இடமிருந்தால்கூட மாநகராட்சி மூலமாக அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, மாநகராட்சியின் நிதியைப் பெற்று, நிச்சயமாக அங்கே மீன் அங்காடி திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***4023—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதியில் இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்கெனவே தொடங்கப்பட்டு, அந்தப் பகுதி மாணாக்கர்களுக்கு நல்ல நிலையில் உயர் கல்வி வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

2020 செப்டம்பர் 15]

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் நம் இதயங்களிலே நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 'எதிரிகள் தாக்கித் தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும்; நீங்கள் தாங்கித் தாங்கி வலுவைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்னும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் கூற்றை, இன்றைக்கு அவருடைய பிறந்த நாளிலே நினைவு கூர்ந்து, அவர்தம் கனவினை நனவாக்கிட, புரட்சித் தலைவர் வகுத்திட்ட வழியிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கற்பித்த இலட்சிய உணர்வோடு, தமிழகத்தை தரணியிலே தன்னிகரில்லா மாநிலமாக மாற்றிட 'நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்று உரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி' எனும் அண்ணாவின் வரிகளுக்கேற்ப, நெஞ்சுரத்தோடு பல வெற்றிகளைக் குவித்துவரும் எங்கள் வெற்றி நாயகன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருந்து, இன்றைக்கு தமிழகத்தை வழிநடத்திச் செல்கின்ற, அமைதியின் திருவுருவம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

நான் ஏற்கெனவே பொருளாதாரத்தில் நலிவுற்ற, எனது தொகுதியில் இருக்கின்ற மக்களுடைய வாழ்வாதாரம் பெருகுகின்ற வகையில், அனைத்துத் தரப்பட்ட மக்களும் உயர் கல்வி பெற வேண்டுமென்று சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். அதனடிப்படையில், அம்மாவினுடைய அரசு ஏற்கெனவே அங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி, இன்றைக்கு அக்கல்லூரி சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், அந்தக் கல்லூரி தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே, ஏறத்தாழ 10 பாடப் பிரிவுகளோடும், 1,385 மாணவர்கள் சேர்க்கையோடும் இன்றைக்கு சிறப்பாக நடைபெறுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் அந்தக் கல்லூரிக்கு என்னவெல்லாம் வேண்டுமென்று கேட்டிருந்தோமோ அவற்றையெல்லாம் அதற்குத் தந்து, அழகான கட்டடம் கட்டப்பட்டு, அனைத்துக் கட்டமைப்பு வசதிகளோடு அந்தக் கல்லூரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூடுதல் கட்டடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதையும் இந்த நிதியாண்டிலே கொடுத்து, அதற்கான கட்டடப் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, மாணவர்களின் கோரிக்கையாக 10 பாடப் பிரிவுகளோடு கூடுதல் பாடப் பிரிவுகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கல்வியாண்டிலே இளங்கலை (தமிழ்), இளங்கலை (வரலாறு), முதுகலை (ஆங்கிலம்), முதுகலை (பொருளியல்) ஆகிய 4 பாடப் பிரிவுகளை வழங்க வேண்டுமென்று மாணவர்களும், அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பாடப் பிரிவுகளையும் இந்தக் கல்வியாண்டிலேயே வழங்க வேண்டும்.

மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணமெல்லாம், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களும் உயர் கல்வி பெற வேண்டும்; குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற மக்களுடைய வாழ்வாதாரம் பெருகுவதற்காகவும், மலைவாழ் மக்கள், பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரம் பெருகுவதற்காகவும்தான் அந்தக் கல்லூரியை அன்றைக்கு வழங்கினார்கள். அந்த அடிப்படையில், இன்றைக்கு அவர் வழியிலே தமிழகத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், உயர் கல்வியில் தமிழகம்தான் சிறந்த மாநிலம் என்று சொல்லத்தக்க வகையில், 48 சதவிகிதத்திற்கும் மேல் உயர் கல்வி பெற்றவர்கள் உள்ள நிலையை உருவாக்கி, கல்வித் துறையைச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேளையில், பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கின்ற மக்கள் மற்றும் மலைவாழ் மக்கள், தாங்களும் ஆராய்ச்சிப் படிப்புகளைப் படிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த வகையில், இந்தக் கல்லூரியில், இந்தக் கல்வியாண்டிலேயே ஆராய்ச்சிப் பாடப் பிரிவைத் தொடங்கிட அனுமதி வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, மேட்டுப்பாளையம் இருபாலர் அரசு கலை

2020 செப்டம்பர் 15]

மற்றும் அறிவியல் கல்லூரிக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆட்சிக் காலத்திலே 2011–க்குப் பின்பாகப் பார்த்தோமென்றால், வரலாற்றில் இல்லாத அளவிற்கு 961 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 705 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில்தான் அந்தக் கல்லூரிக்கு இளநிலை பாடப் பிரிவு, முதுநிலை பாடப் பிரிவு உட்பட 5 பாடப் பிரிவுகளை கூடுதலாக வழங்கி தற்போது மாணாக்கர்களுடைய தேவை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், தற்போது புதிதாக இன்னும் கூடுதலாக இளநிலை, முதுநிலை பாடப் பிரிவுகளையும், ஆராய்ச்சிப் பிரிவில் படிப்பதற்கான வாய்ப்பையும் உருவாக்கித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு MHRD கணக்கீட்டின்படி, மாணாக்கர் சேர்க்கை விகிதம் இந்திய அளவில் 26.3% ஆக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மாவினுடைய அரசில், உயர் கல்வியிலே தொடர்ந்து 49% மாணவர்கள் சேர்க்கை பெற்று, இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை இடத்தில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகின்ற அதே வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கேட்கின்ற அந்தப் பாடப் பிரிவுகளை இந்தக் கல்வி ஆண்டில் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது, ஆய்வு மேற்கொண்டு, சாத்தியக்கூறு இருப்பின் அவற்றை வழங்குவதற்கு முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நான் சொன்னதுபோல, மேட்டுப்பாளையம் தொகுதி, மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் என்று சொல்லக்கூடிய அந்த மக்கள் தற்போது பட்டப் படிப்புகளைப் படித்தாலும்கூட, வேலைவாய்ப்பைப் பெற வேண்டுமென்ற ஓர் உயரிய நோக்கத்தோடு அங்கே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை இப்போது வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்காக, நீங்கள் கனிவோடு

பரிசீலித்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அங்கே அமைப்பதற்கு அனுமதி வழங்குவீர்களேயானால், எதிர்காலத்தில் அவர்கள் முழுமையாக வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் பகுதியிலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, 2 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், அரசு உதவிபெறும் 5 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் என மொத்தம் 7 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அந்த மாவட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாணாக்கர் சேர்க்கையைக் கணக்கெடுத்து எதிர்வரும் காலகட்டத்திலே அது அவசியம் தேவையென்றால் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட சென்னையில் உள்ள ஒட்டுமொத்த 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சேர்த்து, பாரதி மகளிர் கல்லூரி என்ற ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கின்றது. இந்தக் கல்லூரியில் ஆண்டுதோறும் கூடுதல் மாணவியர் சேர்க்கைக்காக, 15–லிருந்து 20 சதவிகிதம் வரை கூடுதல் இடங்களை அரசு ஒதுக்கீடு செய்கிறது. அப்படி ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றபோது, அதற்குத் தேவையான கட்டடங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றன. ஆசிரியர்கள் தேவையும் அதிகரித்து வருகிறது. ஏனென்றால், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி என்பதாலும், அந்தக் கல்லூரி அதிகளவில் பயன்படுகிறது என்பதாலும் உடனடியாக அரசு உரிய கவனம் செலுத்தி கூடுதலான கட்டடங்களுக்கும், கூடுதலான மாணவியர் சேர்க்கைக்கும், கூடுதலான ஆசிரியர் நியமனத்திற்கும், இதேபோன்ற ஒரு கலைக் கல்லூரியை மிகப் பெரிய அளவிலே ஏற்பாடு செய்து தந்து,

2020 செப்டம்பர் 15]

அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பாரதி மகளிர் கல்லூரிக்குக் கூடுதல் கட்டட வசதி தேவையென்று கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு செல்கின்றபோது, ஏற்கெனவே எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடத்திற்கு 210 கோடி ரூபாயை வழங்கியிருந்தார். அதனுடைய தொடர்ச்சியாக 150 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்றார். இந்தக் 'கொரோனா' காரணமாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு காலதாமதமாகி இருக்கின்றது. ஆகவே, பாரதி மகளிர் கல்லூரியிலே தேவையான கட்டமைப்பு வசதி செய்யப்பட்டிருப்பதோடு, மாணாக்கர்களுடைய சேர்க்கை அங்கே கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கல்வியாண்டிலும் 20 சதவிகித மாணவிகளைச் சேர்க்கின்ற வகையிலே அந்தக் கல்லூரிக்கு அனுமதியும் தரப்பட்டிருக்கிறது. ஆக, சென்னையை எடுத்துக் கொண்டோமேயானால், மாணாக்கர்களுடைய விண்ணப்பத்திற்கேற்ப கல்லூரிகள் இருக்கின்றன. அதில் போதுமான இடவசதிகள் இல்லையென்பதைக் கருத்தில் கொண்டுதான் அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகித இடமும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே 15 சதவிகித இடமும், சுயநிதிக் கல்லூரிகளிலே 10 சதவிகித இடமும் கூடுதலாக மாணாக்கர்களின் சேர்க்கைக்கு வழிவகுத்து அரசாணை வெளியிடப்பட்டு, அந்தப் பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உயர் கல்வியில் சேர வேண்டுமென்று எண்ணுகின்ற அத்தனை மாணாக்கர்களும் இன்றைக்கு சேருவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியில் தொடர்ந்து ஒரு கோரிக்கையை வைத்து வருகிறோம். ஆனால், இன்னும் எங்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை. பொதுவாக, மாணவர்களை கல்லூரியில் சேர்ப்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. மாணவர்களை கல்லூரியிலே சேர்க்கும்போது இடம் கிடைப்பதில்லை. ஆனால், நீங்கள் ஒரு கணக்கு வைத்திருக்கிறீர்கள். அரசுக் கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லையென்று நாங்கள் சொல்கிறோம். ஆனால், தனியார் கல்லூரிகளிலே இடம் காலியாக இருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். இந்த இரண்டிற்கும் என்ன வித்தியாசமென்றால், தனியார் கல்லூரிக்குச் சென்றால் அதற்குரிய நிதியைச் செலுத்த வேண்டும். அரசுக் கல்லூரி என்றால் இலவசமாக இருக்கிறது. காரைக்குடியிலே பெண்களுக்கென்று தனியாக ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று தொடர்ந்து நாங்கள் கேட்டு வருகிறோம். எனவே, தயவுகூர்ந்து அதை இந்த அரசு செய்து தருமா என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அங்கு வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மற்றும் அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு ஆகியவற்றை சேர்த்துப் பார்க்கின்றபோது, 2011–க்குப் பின்பு 92 புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி 92 புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற இடங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்டறிந்தாரென்றால், கல்லூரிகளே இல்லாத பகுதியிலே புதிதாகக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது தெரியவரும். அவர் சார்ந்திருக்கக்கூடிய காரைக்குடி பகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களுக்காகத்தான் தனியாக அவர் கேட்கின்றார். அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்தில் 4 அரசு கலை மற்றும் அறிவியல்

2020 செப்டம்பர் 15]

கல்லூரிகள் செயல்படுகின்றன. அதேபோல, 4 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் செயல்படுகின்றன. அரசு உதவிபெறக்கூடிய கல்லூரிகளிலே இன்றைக்கு மாணாக்கர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. சுயநிதிக் கல்லூரிகளில் மட்டும்தான் அவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்லூரிகளே இல்லாத பகுதியிலே கல்லூரிகளை வழங்க வேண்டுமென்பது மாண்புமிகு அம்மாவின் அரசினுடைய எண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கல்வியாண்டிலேகூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அந்தக் கூடுதல் இடங்களைத் தந்து அந்த மாணாக்கர்களுடைய விண்ணப்பத்திற்கேற்ப அந்தந்தப் பகுதியிலே அவர்களுடைய சேர்க்கைக்கு இந்த அரசு வழிவகை செய்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தொழிற்சாலை அமைத்தல்

***51503—திரு. செ. சண்முகையா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,